1991 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

''நுகர் பொருள் வழங்கல் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 358,69,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் 16–9–1991 திங்கட்கிழமை முற்பகல் 9–30 மணிக்குக்கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 7.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. குன்னூர், திருவாளர் இமானுவேல் பார்வையற்றோர் துயர் தணிப்பு சங்கத்தினருக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 22—3—1991-ஆம் நாளிட்ட 167–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

73. வேலூர், திருவாளர்கள் கிருத்துவ மருத்துவக் கல்லூரியினருக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7—5—1991-ஆம் நாளிட்ட 249-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

74. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 25—2—1991-ஆம் நாளிட்ட 68-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

75. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 4–4–1991 ஆம் நாளிட்ட 121-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

76. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 10—4—1991-ஆம் நாளிட்ட 132-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

77. 1989—90-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் (1974-ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

27. கோரிக்கை எண். 3—மோட்டார் வணடிகள் சட்டம்–நிருவாகம் பற்றிய விளக்கக் குறிப்பு, 1991—92 (தமிழ்–ஆங்கிலம்).

28. கோரிக்கை எண். 40—சாலைப் போக்குவரத்துப் பணி, கப்பல் போக்குவரத்து மற்றும் கோரிக்கை எண். 58—சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்து குறித்த மூல தனச் செலவு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

29. கோரிக்கை எண். 23—கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கம், 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

30. கோரிக்கை எண். 35—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

31. நாட்டுடமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்துகப்பல் போக்குவரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுரை, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

32. தமிழ்நாடு துறைமுகத் துறையின் சாதனை விளக்கக் குறிப்பு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்)

33. கோரிக்கை எண். 52—தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

34. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழிற் கல்வியைப் பற்றிய சாதனை விளக்க அறிக்கை, 1991–92 (ஆங்கிலம்).